

Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை

இறைவனுக்கு விருப்பு–வெறுப்பு இல்லை

மனித வாழ்க்கையில் இன்பமும் துன்பமும், ஏற்றத் தாழ்வுகளும் காலத்தின் ஓட்டத்திற்கு ஏற்ப இயல்பாகவே நிகழ்கின்றன. அவற்றை சமச்சீரான மனநிலையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சுகங்களை அனுபவிக்கும் போது ஒருவர் அளவுக்கு மீறிய பெருமிதம் கொள்ளக் கூடாது; அதேபோல் துன்பமான சூழ்நிலைகளில் மனம் தளரவும் கூடாது. இவை அனைத்தும் முன் பிறவிகளிலும் இப்பிறவியிலும் செய்த கர்மங்களின் (செயல்களின்) விளைவு என்பதை உணர்ந்து, ஒருவர் தமது தர்மத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்து, இடைவிடாது இறைவனைப் பிரார்த்தித்து வர வேண்டும்.

சிலர் வாழ்க்கையில் நல்லது நிகழும்போது அதற்குப் பெருமை தாமே எடுத்துக் கொள்கிறார்கள்; ஆனால் துன்பம் வரும்போது அதன் பழியை இறைவன் மீது சுமத்துகிறார்கள். இது முறையல்ல.

இறைவன் எல்லா மனிதர்களையும் சமமாகவே நடத்துகிறார். சிலரை மட்டும் விரும்பி, சிலரை வெறுப்பது என்ற ஒன்று இறைவனிடம் இல்லை. அதனால்தான் அவர் பகவான் என்று அழைக்கப்படுகிறார். ஆகையால், எந்தச் சூழ்நிலையிலும் இறைவனை வழிபடும் பக்தன், இறைவனுக்கு மிகவும் பிரியமானவனாக ஆகிறான். இதைத்தான் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா பகவத்கீதையில் கூறுகிறார்:

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

समोऽहं सर्वभूतेषु न मे द्वेष्योऽस्ति न प्रियः ।
ये भजन्ति तु मां भक्त्या मयि ते तेषु चाप्यहम् ॥

ஸமோ(அ)ஹம்' ஸர்வபூ⁴தேஷு ந மே த்³வேஷ்யோ(அ)ஸ்தி ந ப்ரிய: |

யே ப⁴ஜந்தி து மாம்' ப⁴க்த்யா மயி தே தேஷு சாப்யஹம் ||

"எல்லா உயிர்களிடத்திலும் நான் சமமாக இருக்கிறேன். எனக்கு வெறுப்புக்குரியவரும் இல்லை; பிரியமானவரும் இல்லை. ஆனால், எவர்கள் என்னை பக்தியுடன் வழிபடுகிறார்களோ, அவர்கள் என்னுள் இருக்கிறார்கள்; நானும் அவர்களுள் இருக்கிறேன்."

அப்படியானால், "மற்றவர்கள் இறைவனுக்குப் பிரியமானவர்கள் இல்லையா?" என்ற கேள்வி எழலாம். இந்தக் கேள்வி நீங்குவதற்கு நாம் சரியான புரிதலைப் பெற வேண்டும். ஒரு வீட்டில் விளக்கு ஏற்றப்பட்டால், அது அனைவருக்கும் ஒரே மாதிரியாக ஒளி தருகிறது. ஆனால், அதற்கு அருகில் உள்ள பொருட்கள் தெளிவாகத் தெரிகின்றன; தொலைவில் உள்ளவை அவ்வளவு தெளிவாகத் தெரியாது. இதற்காக அந்த விளக்கைக் குறை கூற முடியுமா? அதேபோல், எந்தச் சூழ்நிலையிலும் இறைவனை வழிபடுபவன் மகிழ்ச்சியுடனும் மன அமைதியுடனும் இருப்பது இயல்பானதே அல்லவா?

இதையே ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதர் மேற்கண்ட கீதா ஸ்லோகத்திற்கு இவ்வாறு விளக்குகிறார்:

दूरस्थानां यथा अग्निः शीतं न अपनयति, समीपम् उपसर्पतां अपनयति ; तथा अहं भक्तान् अनुगृह्णामि, न इतरान् । தூ³ரஸ்தா²னாம்' யதா² அக்³னி: ஶீதம்' ந அபனயதி, ஸமீபம் உபஸர்பதாம்' அபனயதி ; ததா² அஹம்' ப⁴க்தான் அனுக்³ரு'ஹ்ணாமி, ந இதரான் |

"எப்படியோ, தொலைவில் இருப்பவர்களின் குளிரை நெருப்பு நீக்காது; ஆனால் அதனை அணுகி வருபவர்களின் குளிரை நீக்குகிறது. அதுபோலவே, என்னை அணுகி பக்தியுடன் வழிபடுகிறவர்களுக்கு நான் அருள் புரிகிறேன்; மற்றவர்களுக்கு அல்ல."

ஆகையால், தற்போது நாம் அனுபவிக்கும் சுகமோ துன்பமோ நமது முந்தைய செயல்களின் (கர்மங்களின்) விளைவுகளே என்பதை அனைவரும் உணர வேண்டும். எனவே, யாரையும் குறை கூறாமல், தீவிரமான பக்தியுடன் இறைவனை வழிபட்டு, இறைவனுக்கு மேலும் பிரியமானவர்களாக ஆக வேண்டும்.

Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்

10. காலடி கும்பாபிஷேகம்

காலடி ஸமீபம் பெரும்பாவூர் என்ற ஊரில் தங்கியிருக்கும் ஸமயம் ராத்திரி ஸ்வப்னத்தில் ஒரு விதந்து (விதவை) ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் திருஷ்டியில் தோன்றி மந்தஹாஸத்துடன் "மரத்தடியிலேயே இருக்கின்றேன். அழைப்பதற்காக வந்தேன்" என்று சொன்னதாகத் தெரிந்தது. இதன் தாத்பர்யம் விளங்கவில்லை. மறுநாள் காலடியில் ஆலய நிர்மாணமாகி கும்பாபிஷேகத்திற்கு எல்லாம் தயாராயிருப்பதாக தெரிவிக்க



ஏ.ராமசந்திரய்யரும் ஸர்வாதிகாரி ஸ்ரீகண்ட சாஸ்திரிகளும் வந்தவுடன், காலடி ஸன்னிவேச விவரங்களை நன்கு அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டதில், ஆலயத்திற்கு ஸமீபத்தில் ஓர் அசோக விருக்ஷமிருப்பதாகவும் அதன் பக்கம்தான் ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யாருடைய மாதாவின் ஸம்ஸ்கார ஸ்தலமென்றும் கேட்டவுடன், தன்னையழைக்க வந்தது அந்த மாதாவே என்று தீர்மானித்து பரவசராகி கண்களில் நீர் ததும்ப, சரீரம் நடுநடுங்க, பேசமுடியாமல் ஸ்தம்பித்துவிட்டார்கள். பிறகு ஸ்வப்ந விருத்தாந்தத்தைச் சொல்லி ஆசார்ய மாதாவின் பரிபூர்ணமான அனுக்ரஹமிருப்பதாக நிரூபித்து எல்லாரையும் உத்ஸாஹப்படுத்தினார்கள். மறுநாள் காலையில் காலடிக்கு விஜயம் செய்வதாயும் உத்தரவு செய்தார்கள்.

மறுநாள் அதாவது ஸௌம்ய வருஷம் சுக்ல த்விதீயை (11-2-1910) காலை எட்டு மணிக்கு காலடிக்கு விஜயம் செய்தார்கள். முதலில் மாதாவின் ஸம்ஸ்கார ஸ்தலத்தில் நமஸ்காராதிகளை செய்துவிட்டு, பிறகு ஸாயங்காலமாய் கால் நடையாக புறப்பட்டு கும்பாபிஷேகத்திற்காக நிர்மாணம் செய்யப்பட்டிருந்த யாகசாலை, போஜனசாலை, கிருஹ பங்கதிகள் முதலான ஸகல ஏற்பாடுகளையும் தானே நேரில் பார்த்து ஸந்தோஷித்தார்கள். யாகசாலையில்

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஸகல கார்யங்களையும் நிர்வஹிப்பதற்காக நடக்கவேண்டிய குனிகல் ராமசாஸ்திரிகளையும் திருநெல்வேலியில் பிரஸித்த வக்கீலாகவும் ஸ்ரீமடம் தர்மாதிகாரியாகவுமிருந்த தர்மசீல ஏ.கிருஷ்ணஸ்வாமி அய்யரையும் நியமித்தார்கள். முதலில் ஸ்ரீமத் ஆசார்ய மூர்த்தியை மாத்திரம் பிரதிஷ்டை செய்வதாயிருந்தது. பிற்பாடு ஸ்ரீமத் ஆதி ஆசார்யாரே

ஸ்ரீஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹபாரதி ஸ்வாமிகள்.

भजे शारदाम्बामजस्रं मदम्बाम् ।।

என்று ஸ்ரீ சாரதாம்பாளை தன் தாயாராகச் சொல்லியிருப்பதால் ஸ்ரீ சாரதாம்பாளையும் பிரதிஷ்டை செய்யவேண்டுமென்று ஸங்கல்பித்து இரண்டு ஆலயங்களும் கட்டி ஸித்தமாயிருந்தன. காடு மாதிரியிருந்த பிரதேசத்தை பரிஷ்காரம் செய்து தேவாலயங்களும், ஸ்ரீ மடமும், நதியில் படித்துரையும், சில ஸ்திரமான ஜாகைகளும், உத்ஸவ தர்சனார்த்தம் வருகிறவர்கள் ஸௌகர்யத்திற்காக தாற்காலிகமாக அறுநூறு வீடுகளும், இரவு பகல் வித்யாஸம் தெரியாமல் போடப்பட்டிருந்த தீபங்களும், மற்றும் செய்யப்பட்டிருந்த ஸகல ஏற்பாடுகளையும் கவனிக்கும்போது, பரதனுக்கு ஆதித்யம் செய்துவைக்க தன் யோகசக்தியினால் பரத்வாஜ முனிவர் செய்த ஏற்பாடுகளையே உபமானமாகச் சொல்லலாமென்ற ரீதியில் எல்லாம் மிக விமரிசையாகவும் அமைந்திருந்தது. இவ்வளவு ஸாமக்கிரியைகளையும் அழகாகவும் சேகரித்து கார்யங்களையும் நிர்வஹிக்கிற பொறுப்பை திருநெல்வேலி ஜில்லா, அதிலும் விசேஷமாக கல்லிடைக்குறிச்சி சிஷ்யர்கள் ஏற்றுக்கொண்டு நடத்திக் கொடுத்து தங்கள் குருபக்தியைக் காட்டி கிருதார்த்தர்களான விஷயம் குறிப்பிடத்தக்கது.

மாக சுக்ல பஞ்சமீ ஸோமவாரம் (14-2-1910) ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் யாகசாலைக்கு விஜயமாகி ஸங்கல்பம் செய்வித்தார்கள். அன்று முதல் ஏழு நாட்கள் பிரதிஷ்டைக்கு அங்கமான கார்ய கலாபங்கள் நடந்தன. துவாதசி ஸோமவாரம் (21-2-1910) அபிஜித் முஹூர்த்தத்தில் பிரதிஷ்டை யதாக்ரமமாய் நடந்தது. ஸ்ரீஸ்வாமிகளவர்கள் ஆலயங்களுக்கு விஜயம் செய்து விசேஷமாக ஸாந்நித்யம் ஏற்படும்படி பூஜாதிகள் செய்து, கூடியிருந்த சிஷ்யர்களுக்கு தீர்த்தப் பிரஸாதம் கொடுத்தனுக்ரஹித்தார்கள். மத்யானம் பங்க்தி பங்க்தியாய் பிராஹ்மண போஜனம் நடந்தது. (தொடரும்...)


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

॥ श्रीसुब्रह्मण्यभुजङ्गम् ॥
||ஶ்ரீ ஸுப்³ரஹ்மண்ய பு⁴ஜங்க³ம் ||

(அ) கைகளைத் துதிக்கிறார் :-

स्फुरन्मन्दहासैः सहंसानि
चञ्च-त्कटाक्षावलीभृङ्गसङ्घोज्ज्वलानि ।
सुधास्यन्दिविम्बाधराणीशसूनो तवालोकये
षण्मुखाम्भोरुहाणि ॥ १४ ॥

ஸ்பு²ரன்மந்த³ஹாஸை: ஸஹம்'ஸானி சஞ்ச-
த்கடாக்ஷாவலீப்⁴ரு'ங்க³ஸங்கோ⁴ஜ்ஜ்வலானி |
ஸுதா⁴ஸ்யந்தி³விம்பா³த⁴ராணீஶஸூ²னோ
தவாலோகயே ஷண்முகா²ம்போ⁴ருஹாணி
||14||

स्फुरन् (ஸ்பு²ரன்) — ஒளிர்கின்ற, திகழ்கின்ற; **मन्दहासैः** (மந்த³ஹாஸை:) — மெல்லிய புன்னகைகளுடன்; **सहंसानि** (ஸஹம்'ஸானி) — அன்னப்பறவைகளைப் போன்ற (அழகிய); **चञ्चत्** (சஞ்சத்) — அசைகின்ற, சஞ்சலமாக இயங்குகின்ற; **कटाक्षावली** (கடாக்ஷாவலீ) — கடைக்கண் பார்வைகளின் வரிசைகள்; **भृङ्गसङ्घ** (ப்⁴ரு'ங்க³ஸங்க⁴) — வண்டுகளின் கூட்டம்; **उज्ज्वलानि** (உஜ்ஜ்வலானி) — ஒளிவீசுகின்ற, பிரகாசிக்கின்ற; **सुधास्यन्दि** (ஸுதா⁴ஸ்யந்தி³) — அமுதம் பொழிகின்ற, அமுதம் சுரக்கின்ற; **विम्बाधराणि** (விம்பா³த⁴ராணி) — பிம்பப் பழத்தைப் போன்ற சிவந்த உதடுகளையுடைய; **ईशसूनो** (ஈஶஸூ²னோ) — ஓ இறைவனின் புதல்வனே! / ஈசனின் குமாரனே!; **तव** (தவ) — உன்னுடைய; **आलोकये** (ஆலோகயே) — நான் தரிசிக்கிறேன், காண்கிறேன்;**षण्मुख** (ஷண்முக²) — ஆறு முகங்களையுடைய முருகப்பெருமானே!; **अम्भोरुहाणि** (அம்போ⁴ருஹாணி) — தாமரைகளைப் போன்ற முகங்களை

ஈச புத்திரனுடைய ஆறு முகங்களே மலர்ந்த செந்தாமரைகள்.அவருடைய முகங்களில் தவழும் புன்சிரிப்புகளே தாமரைகளில் விளையாடும் அன்னங்கள். அவைகளின் கடாக்ஷங்களே தாமரைகளில் சஞ்சரிக்கும் வண்டுகளின் வரிசைகள். கோவைப் பழங்களைப் போன்ற உதடுகளிலிருந்து சிந்தும் உமிழ்நீர்களே அமுதம் போன்ற தேன் சொட்டுகள். அம்மாதிரியான முகங்களைத் தரிசனம் செய்வதால் அமுதலாபம் ஏற்படும். இங்கு முருகக்

கடவுளின் அழகிய ஆறு முகங்களையும் உருவகப்படுத்தி தாமரைகளாக வர்ணித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (14)

(அ) கடாக்ஷத்தை வர்ணிக்கிறார்:-

विशालेषु कर्णान्तदीर्घेष्वजस्रं दयास्यन्दिषु द्वादशस्वीक्षणेषु ।
मयीषत्कटाक्षः सकृत्पातितश्चे-द्भवेत्ते दयाशील का नाम हानिः ॥ १५ ॥

விஶாலேஷு கர்ணாந்ததீ³ர்கே⁴ஷ்வஜஸ்ரம்'
த³யாஸ்யந்தி³ஷு த்³வாத³ஶஸ்வீக்ஷணேஷு |
மயீஷத்கடாக்ஷ: ஸக்ரு'த்பாதிதஶ்சேத்³
ப⁴வேத்தே த³யாஶீல கா நாம ஹானி: ||15||

विशालेषु (விஶாலேஷு) — விசாலமானவற்றில், அகன்றவற்றில்; **कर्णान्त** (கர்ணாந்த) — காதுகளின் நுனிவரை; **दीर्घेषु** (தீ³ர்கே⁴ஷு) — நீண்டுள்ளவற்றில்; **अजस्रम्** (அஜஸ்ரம்) — இடைவிடாமல், எப்போதும்; दया (த³யா) — கருணை; **स्यन्दिषु** (ஸ்யந்தி³ஷு) — பொழிகின்றவற்றில், பெருகி வழிகின்றவற்றில்; **द्वादशसु** (த்³வாத³ஶஸு) — பன்னிரண்டிலும்; **ईक्षणेषु** (ஈக்ஷணேஷு) — கண்களில், பார்வைகளில்; **मयि** (மயி) — என்னிடம், என் மீது; **ईषत्** (ஈஷத்) — சிறிதளவு, சற்றே; **कटाक्षः** (கடாக்ஷ:) — கடைக்கண் பார்வை; **सकृत्** (ஸக்ரு'த்) — ஒருமுறை; **पातितः** (பாதித:) — செலுத்தப்பட்டால், விழச் செய்யப்பட்டால்; **चेत्** (சேத்) — என்றால், ஆயின்; **भवेत्** (ப⁴வேத்) — உண்டாகும், நிகழும்; ते (தே) — உனக்கு, உம்முடைய; **दयाशील** (த³யாஶீல) — கருணை இயல்பாக உடையவரே! கருணைமிக்கவரே!; **का** (கா) — என்ன?; **नाम** (நாம) — உண்மையில், எவ்வகையான; **हानिः** (ஹானி:) — இழப்பு, குறைவு

முருகனுடைய பன்னிரு கண்களும் மிகுந்த அழகு வாய்ந்தவை. அவைகள் அகன்றனவாயும் காதுவரை நீண்டனவாயும் விளங்குகின்றன. அக்கண்களின் சிறிதளவு பார்வை விழுந்தாலும் மிகுந்த நன்மையே உண்டாகும். ஏனெனில் முருகன் தயாமூர்த்தி. பக்தர்களின் துயரை நீக்கும் தன்மை வாய்ந்தவன். அவனது கடைக்கண் பார்வைகளோ எப்பொழுதும் அமுதத்தைப் பெருக்குகின்றன. அவ்வாறான கடைக்கண்களைப் பக்தர்கள் பால் செலுத்துவதால் அவனுக்கு யாதொரு நஷ்டமும் கிடையாது. பக்தர்களுக்கும் மிகுந்த லாபம் ஏற்படுகிறது. (15)

(தொடரும்...)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

सन्ध्यावन्दनम्

ஸந்த்⁴யாவந்த³னம்

[சிருங்கேரி ஜகத்குரு ஶ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அருளிய விளக்கங்களுடன்]

காயத்ரீயின் மஹிமை

மனிதனுக்கு இன்பத்தைக் கொடுத்து, அவனை ஆனந்தக் கடலில் மூழ்கச் செய்யவே வேதங்கள் ஈஸ்வரனிடத்திலிருந்து வெளிவந்தன. நாம் நமது ஆசைகளை வேதங்களில் உபதேசிக்கப் பட்டுள்ள கர்மோபாஸனைகளினாலும், ஞானத்தினாலும் நிறைவேற்றிக் கொள்ளலாம்.

प्रत्यक्षेणानुमित्या वा यस्तूपायो न बुध्यते ।
एतं विदन्ति वेदेन तस्माद्वेदस्य वेदता ।।

(ऋग्वेदसंहिता-भाष्य-भूमिका)

"எந்த ஸாதனத்தை ப்ரத்யக்ஷம் மற்றும் அனுமானத்தினால் அறிய முடியாதோ அது வேதத்தினால் அறியப்படுகிறது. ஆகையால்தான் வேதத்திற்கு 'வேதம்' என்கிற ஸ்தானம்."

எந்த வேதம் நமக்கு "நல்ல கண் பார்வையை விரும்புபவன் ஸூர்ய மந்த்ரத்தை உபாஸிக்கட்டும். ஸ்வர்க்கத்தை எவன் விரும்புகிறானோ அவன் தர்ஸ-பூர்ணமாஸ யாகங்களைச் செய்யட்டும்" என்று நாம் விரும்பும் பலன்களுக்கு அதற்குத் தகுந்த கர்மாக்களான யாகங்களையும், உபாஸனைகளையும் விதிக்கிறதோ, அதே வேதம் நமது பாவங்களை அழிப்பதும், ஸ்வர்க்கம் போன்ற லௌகிக விருப்பங்களுக்கு ஸாதனமானதும், ஸகுண-நிர்குண உபாஸனைகளின் பலனைக் கொடுப்பதுமான மஹா காயத்ரீ மந்த்ரத்தை நமக்கு உபதேசித்திருக்கிறது.

மந்த்ரம் என்பதன் விளக்கம் :

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

மந்த்ரம் என்ற சொல்லுக்கு.

मन्तारं त्रायत इति मन्त्रः (नैरुक्ताः)

மந்தாரம்’ த்ராயத இதி மந்த்ர: (நைருக்தா:)

"தன்னைச் சிந்திப்பவனைக் காப்பாற்றுவதனால் அது மந்த்ரம்" என்று விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

ஏழு கோடி மஹா மந்த்ரங்கள் இருக்கின்றன என்று ஓர் உலக வழக்கு உண்டு. மஹா மந்த்ரங்களே ஏழு கோடி உள்ள பொழுது உபமந்த்ரங்களும், பாஷா(மொழி) மந்த்ரங்களும் எவ்வளவு என்று கணக்கிடுவது சாத்தியமேயில்லை. இவற்றில் சில மந்த்ரங்கள் லௌகிகப் ப்ரயோஜனங்களுக்காகவும், சில ஸ்வர்க்கத்தை அடைவதற்காகவும், மற்றும் சில ப்ரஹ்ம உபாஸனைக்கும் இருக்கின்றன. மந்த்ரங்களை இன்னொரு விதமாக வேத மந்த்ரங்கள், தந்த்ர மந்த்ரங்கள் என்று கூடப் பிரிக்கலாம். வேதத்தினால் உபதேசிக்கப்பட்ட மந்த்ரங்கள் வேத மந்த்ரங்கள். இதற்கு உதாரணம் 'ஸௌர-அஷ்டாக்ஷரீ" மந்த்ரம். தந்த்ர க்ரந்தங்களில் உபதேசிக்கப்பட்டவை தந்த்ர மந்த்ரங்கள்.

ஒவ்வொரு எழுத்தும் மந்த்ரம்தான்.

अमन्त्रमक्षरं नास्ति नास्ति मूलमनौषधम् ।
अयोग्यः पुरुषो नास्ति योजकस्तत्र दुर्लभः ॥

(महासुभाषितसङ्ग्रह २४२३)

அமந்த்ரமக்ஷரம்’ நாஸ்தி நாஸ்தி மூலமனௌஷத^{4}ம் |
அயோக்^{3}ய: புருஷோ நாஸ்தி யோஜகஸ்தத்ர து^{3}ர்லப^4: ||

(மஹாஸுபா^{4}ஷிதஸங்க்^{3}ரஹ 2423)

மந்த்ரமாகாத எழுத்தில்லை. வைத்தியத்திற்கு உபயோகம் ஆகாத மூலிகையில்லை. திறமையில்லாத மனிதனுமில்லை. ஆனால் இவைகளை (பயனளிக்கும் வகையில்) சரியாகச் சேர்ப்பவன் கிடைப்பது அரிது." என்று கூறப்பட்டிருப்பது போல் மந்த்ரங்களின் ரிஷி, சந்தஸ் மற்றும் தேவதைகளை அறிந்தவன் கிடைப்பது அரிது. நாம் ஜபிக்கும் மந்த்ரங்கள் நமக்குப் பயன் தருவதில்லை என்றால் அதற்கான காரணம் அந்த மந்த்ரங்களைப் பற்றிய நம்முடைய அக்ஞானமே ஆகும். தேவதையிலோ, மந்த்ரத்திலோ ஒரு விதமான குறையும் இல்லை

(தொடரும்...)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

श्रीमन्नारायणीयम्

ஸ்ரீமந்நாராயணீயம்

अष्टमं दशकम्

அஷ்டமம்’ த³ஶகம் - பிரளயமும் சிருஷ்டியும்

तवैव वेषे फणिराजि शेषे जलैकशेषे भुवने स्म शेषे ।

आनन्द सान्द्रानुभव स्वरूपः स्वयोगनिद्रा - परिमुद्रितात्मा ।। ६ ।।

தவைவ வேஷே ப²ணிராஜி ஶேஷே ஜலைகஶேஷே பு⁴வனே ஸ்ம ஶேஷே .

ஆனந்த³ ஸாந்த்³ரானுப⁴வ ஸ்வரூப꞉ ஸ்வயோக³நித்³ரா - பரிமுத்³ரிதாத்மா .. 6 ..

ஆதிசேஷனையே தமது திருப்படுக்கையாகக் கொண்டு, பிரளய காலத்தில் உலகமெங்கும் நீர் மட்டுமே எஞ்சியிருக்கும் அந்த மகா பிரளய சமுத்திரத்தின் மீது யோகநித்திரையில் பள்ளிகொண்டிருக்கும் பரம்பொருளே! அப்போது அனைத்து உலகங்களும் உன்னிடமே ஒடுங்கி, நீ மட்டுமே எஞ்சியிருப்பதால், நீயே உண்மையான "சேஷன்" (இறுதியில் எஞ்சியிருப்பவன்) எனப் போற்றப்படுகிறாய். எல்லையற்ற ஆனந்தத்தின் செறிந்த அனுபவமே உனது இயல்பாகும்; அந்தப் பேரானந்தத்தில் திளைத்து, யோகநித்திரை என்னும் தெய்வீக நிலையால் வெளிப்புறச் செயல்களை அடக்கி, தன்னிலேயே முழுமையாக நிலைத்திருக்கும் பரமாத்மாவாக நீ விளங்குகிறாய்.

कालाख्य शक्ति प्रलयावसाने प्रबोधयेत्यादिशता किलादौ ।

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

त्वया प्रसुप्तं परिसुप्तशक्ति व्रजेन तत्राखिल जीवधाम्ना ।। ७ ।।

காலாக்²ய ஶக்தி ப்ரலயாவஸானே ப்ரபோ³த⁴யேத்யாதி³ஶதா கிலாதௌ³ .

த்வயா ப்ரஸுப்தம்' பரிஸுப்தஶக்தி வ்ரஜேன தத்ராகி²ல ஜீவதா⁴ம்னா .. 7 ..

பிரளய காலம் முடிவடைந்தபோது, "இப்போது உலகப் படைப்பை மீண்டும் தொடங்கு" என்று கால சக்தி (காலதேவதை) உன்னை எழுப்புமாறு ஆணையிடுகிறது. அதுவரை நீ யோகநித்திரையில் ஆழ்ந்திருக்கும் நிலையில், உன்னுடைய சக்திகளும் முழுவதும் ஒடுங்கி உறங்கிக் கிடக்கின்றன. மேலும், அனைத்து ஜீவராசிகளும் தங்கியிருக்கும் ஆதாரமாகிய காரண நிலையுடன், எண்ணற்ற உயிர்களின் சூட்சும விதைகளும் உன்னிடமே ஒடுங்கி அமைதியாக இருக்கின்றன. பின்னர் உன் திருவுளத்தால் யோகநித்திரை நீங்கி, படைப்புத் தொழில் மீண்டும் ஆரம்பிக்கிறது; அப்போது உன்னுள் ஒடுங்கியிருந்த சகல சக்திகளும் உயிர்களும் தத்தம் கர்மத்திற்கு ஏற்றவாறு மீண்டும் வெளிப்பட்டு உலகம் புதிதாக உருவாகிறது.

चतुर्युगाणां च सहस्र-मेवं त्वयि प्रसुप्ते पुनरद्वितीये ।

कालाख्य शक्तिः प्रथम प्रबुद्धा प्रबोधयत् त्वां किल विश्वनाथ ।। ८ ।।

சதுர்யுகா³ணாம்' ச ஸஹஸ்ர-மேவம்' த்வயி ப்ரஸுப்தே புனரத்³விதீயே .

காலாக்²ய ஶக்தி꞉ ப்ரத²ம ப்ரபு³த்³தா⁴ ப்ரபோ³த⁴யத் த்வாம்' கில விஶ்வநாத² .. 8 ..

நான்கு யுகங்கள் (கிருத, திரேதா, துவாபர, கலி) ஆயிரம் சேர்ந்து அமையும் ஒரு பிரம்ம பகல் முடிந்து, பிரளய காலத்தில், ஒப்பற்ற ஒரே பரம்பொருளாக நீ யோகநித்திரையில் ஆழ்ந்திருக்கும் போது, முதலில் விழிப்புறுவது கால சக்தியாகும். உலகப் படைப்பிற்கான காலம் வந்துவிட்டது என்பதை உணர்த்தி, அந்த கால சக்தியே, "உலகநாதனே! இப்போது படைப்புத் தொழிலை மீண்டும் தொடங்கும் நேரம் வந்துவிட்டது" என்று உன்னை எழுப்புகிறது. அதன் பின்னரே உன் தெய்வீக சங்கல்பத்தால் படைப்பு மீண்டும் ஆரம்பமாகி, பிரளயத்தில் ஒடுங்கியிருந்த அனைத்து உலகங்களும், உயிர்களும், தத்துவங்களும் தத்தம் நிலைகளில் வெளிப்பட்டு இயங்கத் தொடங்குகின்றன.

(தொடரும்..) Our Mail ID : Info@voiceofjagadguru.com

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

श्री रुद्रप्रश्नः

ஶ்ரீ ருத்³ரப்ரஶ்ன:

(நமகம்)

नम्ः सहमानाय निव्याधिन आव्याधिनीनां पतये नमो नमः

नमः (நம:) – வணக்கம், நமஸ்காரம்; सहमानाय (ஸஹமானாய) – அனைத்தையும் பொறுத்தருளுபவருக்கு; சகித்துக் காத்தருளுபவருக்கு; निव्याधिने (நிவ்யாதி⁴னே) – துல்லியமாகத் தாக்குபவருக்கு; எதிரிகளை ஊடுருவித் துளைப்பவருக்கு; आव्याधिनीनाम् (ஆவ்யாதி⁴னீனாம்) – எல்லாத் திசைகளிலும் தாக்கும் வீரர்களின்; पतये (பதயே) – தலைவராக இருப்பவருக்கு; அதிபதிக்கு; नमो नमः (நமோ நம:) – மீண்டும் மீண்டும் வணக்கம்

[எல்லாவற்றையும் பொறுத்து அருள்புரிபவரும், துல்லியமாகத் தாக்குபவரும், எல்லாத் திசைகளிலும் தாக்கும் வீரர்களின் தலைவருமான ருத்ரனுக்கு மீண்டும் மீண்டும் வணக்கம்.]

ककुभाय निपङ्गिणे स्तेनानां पतये नमो नमो

ककुभाय (ககுபா⁴ய) – உயர்ந்தவருக்கு; எல்லாத் திசைகளிலும் பரவி நிற்பவருக்கு; சிறந்தவருக்கு; निपङ्गिणे (நிபங்கி³ணே) – வாளை இடுப்பில் அணிந்தவருக்கு; ஆயுதம் தாங்கியவருக்கு; स्तेनानाम् (ஸ்தேனானாம்) – திருடர்களின்; पतये (பதயே) – தலைவருக்கு; அதிபதிக்கு; नमो नमः (நமோ நம:) – மீண்டும் மீண்டும் வணக்கம்

[எல்லாத் திசைகளிலும் நிறைந்திருப்பவரும், வாளைத் தாங்கியவரும், திருடர்களுக்குக் கூட அதிபதியான பரமசிவனுக்கு மீண்டும் மீண்டும் வணக்கம்.]

குறிப்பு: இங்கு "திருடர்களின் தலைவன்" என்பது சிவபெருமான் திருடர்களைப் பாதுகாக்கிறார் என்ற பொருளல்ல. உலகிலுள்ள நல்லோர், தீயோர், எல்லா ஜீவராசிகளுக்கும் ஆதாரமாகவும், அவர்களின் அந்தர்யாமியாகவும் இருப்பவர் என்பதையே வேதம் உணர்த்துகிறது. (தொடரும்…)



Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

Our Website link : https://www.voiceofjagadguru.com/

Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel :

https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wlaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UIl

Facebook link : https://www.facebook.com/share/1Du5xkve4e/

For free e magazines : Our Mail ID : Info@voiceofjagadguru.com

Editorial Board		
Sri P A Murali	Hon' Advisor	Administrator & CEO, Sri Sringeri Mutt & It's Properties, Sringeri
Sri S N Krishnamurthy	Hon' Editor	Sri Sringeri Mutt, Sringeri
Sri Tangirala Shiva Kumara Sharma	Hon' Editor	Sri Sringeri Mutt, Sringeri
PujyaSri Swami Guruparananda	Hon' Editor	Founder Acharya, Poornalaya & Mentor Sri Swami Chidbhavananda Ashram, Vedapuri, Theni.
Sri B Vijay Anand	Web Director	Coimbatore
Smt B Srimathi Veeramani	Web Asst Director & Chief Editor	Tirunelveli
K M Kasiviswanathan	Hon' Editor	Tirunelveli

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்